# மேட்டுப்பாளையம் நகராட்சி

20.11.2018ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

1.

மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டு சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் 34ன்படி மாநகராட்சி நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரமான தானியங்கி குடிநீர் மையங்கள் அமைக்கும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகம் ந.க.எண்.17018/2018/குவ1, நாள்.23.08.2018ல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி இப்பணிக்கு 17 இடங்களுக்கு 08.11.2018ல் விருப்பம் தெரிவித்தல் ஒப்பந்தம் அறிவிப்பு மூலம் நேரிடையாக தாரணா இன்ப்ராஸ்டரக்சர் புராஜெக்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை (Dharana Infrastructure Project Private Limited, Chennai) அவர்களது விருப்பம் தெரிவித்தல் ஒப்பந்த உறைகள் வரபெற்றது.

| Sl. No | Description | Rate to be remitted to the Municipality (Rupees per 20 Ltr) | Rate to be charges for sale to public (Rupees per 20 Ltr.) | Rate be charged for sale to public (Rupees per 1 Ltr from chilling machine) |
|---|---|---|---|---|
| 1 | Establishment of 1000 Ltr./ Hr. capacity community drinking water system through Reverse Osmosis with UV treatment in Seventeen locations of Mettupalayam Municipality under ppp mode | 1.00 | 6.90 | 1.00 |

மேற்படி விலை விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி வரப்பெற்ற திருவாளர் தாரனா இன்ப்ராஸ்டரக்சர் புராஜெக்ட் பிரைவேட் லிட் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.3546/2018/இ2

**தீர்மானம் எண் :** 133

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

2.

மேட்டுப்பாளையம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2018 –2019ன் கீழ் திடக்கழிவு மேலாண்மைக்கு மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்கள் 12 எண்ணிக்கைகள் வாங்கி பயன்படுத்துதல் (மதிப்பீடு ரூ.21.60 இலட்சம்) பணிக்கு 18.09.2018 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| **1.** | மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்கள் 12 எண்ணிக்கைகள் வாங்குதல் | **21.60** | திரு. ஆர். மதுசூதனன். சென்னை | **4.11%** மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். பிரிவலன்ஸ் கிரீன் சொலுசன் பிரைவேட் லிமிடெட் , பெங்களூர் | **6.11%** மதிப்பீட்டிற்கு குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திருவாளர். சட்டில்கார்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை | 1.42% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். சார்ப் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் | 12.22% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். அருண் இந்தியன் மோட்டர்ஸ், சேலம். | 0.56% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். பிரியம் இன்டஸ்ரீஸ் மற்றும் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட், சென்னை | 0.06% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். நெப்ட்யூன் ஆட்டோமேஷன், ஈரோடு | 17.22% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 7ல் உள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். நெப்ட்யூன் ஆட்டோமேஷன், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளி 17.22% மதிப்பீட்டிற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தமையால் இவ்வொப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து ஆணையர், பொறியர், உதவிப்பொறியர் உடன் ஆய்வு செய்யப்பட்டதில், திருவாளர் நெப்ட்யூன் ஆட்டோமேஷன் , ஈரோடு அவர்கள் ஏற்கனவே தூய்மை இந்தியா திட்டம் 2015 – 2016 திட்டப்பணியில் உரக்கிடங்கின் உட்புறம் உலர்கழிவு சேகரிப்பு மையம் கட்டுதல் பணிக்கு (மதிப்பீடு ரூ.30.00 இலட்சம் ) தேர்வு செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி தொடங்கி முதற்கட்ட நிலையிலேயே தனக்கு மேற்கொண்டு பணியினை தொடங்க நிதி நிலை சிரமமாகவுள்ளது என கேட்டதற்கிணங்க முதல் பகுதிப்பட்டியல் வழங்கப்பட்டது.

மேலும் இந்நகராட்சியிலிருந்து பலமுறை குறிப்பாணை அனுப்பியும் இப்பணியில் எவ்வித முன்னேற்றமும் காண்பிக்கவில்லையாதலால் திருவாளர் நெப்ட்யூன் ஆட்டோமேஷன் 18.09.2018ம் தேதிய மேற்குறிப்பிட்ட பொருளில் உள்ள பணிக்கான ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கும் பட்சத்தில் முந்தைய பணியில் காணப்படுவது போல் சுணக்கம் ஏற்படும் என அன்னாரது மீது நம்பிகையின்மை ஏற்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளியாக 15% க்குக் கீழ் 17.22% மதிப்பீட்டிற்கு குறைவாக விநியோகிக்கும் வாகனங்களின் தரம் பற்றிய கருத்துக்கள் காரணமாக இத்தொகை பிணையத் தொகையாக வசூலிக்கப்படுகிறது.

எனவே, திருவாளர் நெப்ட்யூன் ஆட்டோமேஷன் அவர்கள் தற்பொழுது இந்நகராட்சியில் 18.09.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட திடக்கழிவு மேலாண்மைப் பணியில் மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்கள் 12 எண்ணிக்கைகள் வாங்குதல் பணிக்கு 28.09.2018 தேதியில் குறிப்பிட்ட 10 சதவீதம் தொகையான ரூ.1,78,800/– பிணைய வைப்புத் தொகையை செலுத்தக் கடிதம் அனுப்பப்பட்டது. இது நாள் வரை பிணையத்தொகையினை செலுத்தாமல் ஒப்பந்தாரர் நெப்ட்யூன் ஆட்டோமேஷன், ஈரோடு அவர்கள் உதாசினப்படுத்தி வந்ததால் மீண்டும் 12.11.2018ல் அவருக்கு இறுதி கெடுவாக இதில் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் 19.11.2018 அன்று நேரில் ஆஜராகி விளக்கமளிக்க கடிதம் அனுப்பப்பட்டதில் அதற்கும் எவ்வித பதிலும் இல்லாததாலும் திருவாளர் நெப்ட்யூன் ஆட்டோமேஷன் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை நிராகரித்தும், இத்திட்டப்பணியின் அவசியம் கருதி பொது மக்கள் சுகாதாரம் பேணும் பணியானதாலும் இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் செலவினம் மற்றும் காலதாமதம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் 18.10.2018ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இவருக்கு (நெப்ட்யூன் ஆட்டோமேஷன், ஈரோடு) அடுத்தபடியாக உள்ள வ.எண்.4 திருவாளர். சார்ப் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர், 12.22% மதிப்பீட்டிற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் இவ்வொப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைவிட 12.22% குறைவாக கொடுக்கப்பட்டிருப்பதால் பொறியாளர் கையேட்டு குறிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி வரைவு விதிகளின்படி இப்பணிக்கு 5% பிணையத்தொகையினை பெற்று (L2) திருவாளர். சார்ப் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. L1 ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கு L2 ஒப்பந்ததாரர்க்கு அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1845/2018/இ1

**தீர்மானம் எண் :** 134

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனம் JICA திட்டம் 2013–2014ன் கீழ் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.916.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், ரூ.760.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 25.152 கி.மீ பகிர்மான குழாய்கள், 2.166கி.மீ பிரதான குழாய்கள் மற்றும் 2.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைத்தல் பணி முடிவுற்றுள்ளது. இத்திட்டப்பணியில் அமைக்கப்பட்டுள்ள குழாய்களின் மூலம் 2870 குடிநீர் இணைப்புகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போழுது பணிகள் அனைத்தும் முடிவுற்ற நிலையில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய்களை ஆய்வு மேற்கொண்டு இணைப்புகள் வழங்கியதில் 1880 இணைப்புகள் மட்டுமே வழங்க முடிந்தது.<br><br>தற்பொழுது நகராட்சியில் உள்ள 12209 இணைப்புகளிலும் நிலையான கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. அதனால் இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள 1880 இணைப்புகளுக்கு மீட்டர் கட்டணமும், மற்ற அனைத்து இணைப்புகளுக்கும் நிலையான குடிநீர் கட்டணமும் வசூல் செய்ய இயலாது. இத்திட்டத்தின் கீழ் 2870 நீரளவிகள் பொருத்த மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது நகராட்சியில் மொத்தம் 12209 இணைப்புகள் உள்ளதால் அனைத்து குடிநீர் இணைப்புகளிலும் பொருத்த பிரேரணைகள் அரசிடம் சமர்ப்பித்து நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்றவுடன் அனைத்து குடிநீர் இணைகளிலும் நீரளவிகள் பொருத்த மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இத்திட்டத்தின் கீழ் 1880 நீரளவிகள் மட்டும் பொருத்தி மீட்டர் கட்டணம் வசூல் செய்தும் மற்ற குடிநீர் இணைப்புகளுக்கு நிலையான கட்டணம் வசூல் செய்யும் பட்சத்தில் பொது மக்கள் இடையே மிகுந்த ஆட்சேபணை வழக்கூடும் என்பதாலும் மற்றும் இதர குடிநீர் இணைப்புகளுக்கு உடனடியாக மீட்டர் பொருத்த நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும், நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்றவுடன் அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தப்படும்.<br><br>இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள குடிநீர் நீரளவிகளுக்கு பாதுகாப்பு பெட்டிகள் ஒப்பந்தத்தில் இல்லாத காரணத்தால் நீரளவிகள் சேதம் ஆகும் வாய்ப்புகள் உள்ளன.<br>தற்பொழுது நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும் மீட்டர் கணக்குகள் எடுக்க ஆட்கள் பற்றாக்குறை உள்ளதினை கருத்தில் கொண்டும் மீட்டர்கள் பொருத்துவதற்கான இனங்களை ஒப்பந்தத்தில் இருந்து நீக்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>எனவே தற்பொழுது அனைத்து பணிகளும் முடிவுற்றுள்ளதாலும் மேலும் திட்ட மானியம் மற்றும் கடன் தொகை அனைத்தும் முழுமையாக செலவிடப்பட்டுள்ளதாலும் கூடுதல் செலவினம் நகராட்சி பங்களிப்பு தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். தற்பொழுது நகராட்சியின் நிதி நிலைமை போதியதாக இல்லாத காரணத்தால் இத்திட்டப்பணியின் முடிவறிக்கை தயாரிக்க அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.4614/2010/இ1<br>**தீர்மானம் எண் :** 135<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| 4. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2016–2017ம் ஆண்டு நிர்ணயப்பட்டியல் மஸ்தூர்–2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.12.2018 முதல் 60 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.10,06,500/–க்கு மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1688/2016/எச்1 |

| | |
|---|---|
| | **தீர்மானம் எண் :** 136<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் டெங்கு மற்றும் சிக்கன்குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் ஒரு பகுதியாக நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடுகளில் Indoor மற்றும் Outdoor fogging செய்யப்பட்டு வருகிறது. எனவே இதற்கு தேவையான நோய்தடுப்பு மருந்து Pyrethrum 2% Extract 200 லிட்டர் வாங்க ஆகும் தோரய செலவினம் ரூ.2.40 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இம்மருந்தினை தமிழ்நாடு அரசு மருத்துவக் கழகம், சென்னை (TNMSC) அவர்களின் அங்கீகாரம் பெற்ற திருவாளர்கள் பைவரா கார்ப்பரேஷன் லிமிடெட்., அவர்களிடமிருந்து நேரடியாக வாங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.4313/2018/எச்1<br>**தீர்மானம் எண் :** 137<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |

## மேட்டுப்பாளையம் நகராட்சி

30.11.2018ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

# <u>கூட்டப் பொருள்</u>

1. 2017–2018ஆம் ஆண்டில் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகள் விவரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கோவை அவர்களது கடித ந.க.எண்.520/ நாள்.24.08.2017ன்படி விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் விளம்பரம் செய்யப்பட்டதற்கு தொகை வழங்குவதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பத்திரிக்கையின் பெயர் | அளவு | தொகை (ரூ) | விளம்பரம் செய்த நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1. | மக்கள் குரல் பத்திரிக்கை | 25 X 33 | 18900/– | Newsmen Associates Limited Coimbatore |
| 2. | தினத்தந்தி பத்திரிக்கை | 400 sqcm | 43200/– | The daily Thanthi |

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண்.3372/2018/இ1

**தீர்மானம் எண் :** 138

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

2. மேட்டுப்பாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் எண்.22866/228/பி3, நாள்.20.08.2018ல் 1.வார்டு எண்23 முத்தமிழ்நகர் பகுதியில் நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் பணிக்கு ரூ.55.30 இலட்சம் மதிப்பீட்டிற்கும் 2. நகராட்சி உரக்கிடங்கில் நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் பணிக்கு ரூ.66.80 இலட்சம் மதிப்பீட்டிற்கும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ந.க.எண்.18281/2018/டிஓ1, நாள்.29.08.2018ல் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. அதன்பின் இப்பணிக்கான மேல்நடவடிக்கை தொடரப்பட்டு இப்பணிக்கு 18.09.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 28.09.2018ல் பணி ஆணை வழங்கப்பட்டது. இவ்விரு பணிகளில் நகராட்சி உரக்கிடங்கில் நுண்ணுயிரி உரமாக்கல் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. அதுசமயம் வார்டு எண்.23 முத்தமிழ் குடியிருப்போர் நலச்சங்கம் வாயிலாக மேட்டுப்பாளையம் நீதிமன்றம் வாயிலாக (In the Court of the Subordinate Judge of Mettupalayam) IA No 571/2018/ Os No.268 of 2018ல் இவ்விடத்தில் பணி மேற்கொள்ள தடைவிதிக்கக் கோரி வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கில் பணி மேற்கொள்ள தடையாணை வழங்கப்பட்டது. மேலும் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டு குழு அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும் இப்பணியினை மேற்கொள்ள வார்டு எண்.11 நெல்லித்துறை ரோடு மயானம் பகுதியில் மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டது.

எனவே ஏற்கனவே முத்தமிழ்நகர் பகுதியில் நுண்ணுயிரி உரமாக்குதல் மையம் அமைத்தல் பணிக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் திருவாளர் திருமுருகன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், பவானி அவர்களுக்கு அதே மதிப்பீட்டு விகிதத்திற்கு பணியினை மேற்கொள்ளவும், இத்திட்டப்பணிகள் மேற்கொள்ளும்போது கூடுதல் செலவினங்களுக்கு ஏற்படுமாயின் அதனை நகராட்சி பொது நிதியின் மூலம் ஈடு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** இத்திட்டப்பணியானது பொதுமக்களின் சுகாதாரம் பேணும் அரசு திட்டப்பணியானதால் இப்பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் :** 139

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| 3. | இந்நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு எண்கள் TN40C7079, TN40C7087ற்கு 02.12.2018ஆம் தேதியுடன் இன்சூரன்ஸ் கட்டணம் முடிவடைகிறது. எனவே மேலும் 03.12.2018 முதல் 02.12.2019 முடிய காலத்திற்கு இன்சூரன்ஸ் கட்டணம் (United India Insurance co Ltd) ரூ. 12577 + 12577/–ஐ செலுத்த தனி அலுவலர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.4059/2018/இ1<br>**தீர்மானம் எண் :** 140<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| 4. | இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள 33 வார்டுகளில் Water ATM அமைப்பதற்கு இரண்டாம் முறையாக டெண்டர் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பெற பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. Ravi Publicity Service நிறுவனம் மூலம் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு தொகை ரூ. 72188/–ஐ ( Ravi Publicity Service) மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.3372/2018/இ1<br>**தீர்மானம் எண் :** 141<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பல்வேறு இடங்களில் மக்கும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்க வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தி உள்ளதை அடுத்து வார்டு எண் 19 அண்ணா தினசரி மார்க்கெட் மற்றும் அருகாமையில் உள்ள வீடுகளில் இருந்து குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்க Onsite Compost முறையின் மூலம் தொட்டிகள் மற்றும் மேற்கூரை அமைக்க ரூ. 90,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை இந்நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 142<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| 6. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, எம்.பி.பி மண்டபம் சாலையில் சிறுபாலம் உடைந்து மழைநீர் சாலையில் தேங்கி போக்குவரத்து பாதிப்படைகிறது. எனவே அவ்விடத்தில் புதிய சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.40,000/–, ஆகும். இத்தொகையினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 143<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| 7. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பல்வேறு இடங்களில் மக்கும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்க வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தி உள்ளதை அடுத்து வார்டு எண்.20, அண்ணா தினசரி மார்க்கெட் மற்றும் அருகாமையில் உள்ள வீடுகளில் இருந்து குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்க Onsite Compost முறையின் மூலம் தொட்டிகள் மற்றும் மேற்கூரை அமைக்க ரூ. 1,30,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை இந்நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 144 |

| | |
|---|---|
| | **தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| **8.** | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6ல் உள்ள நேருஜி நகராட்சி பள்ளியில் சுற்றுசுவர் மழையினால் மிகுந்த சேதம் அடைந்துள்ளது. மேலும் இப்பள்ளி ஆற்றின் அருகாமையில் உள்ளதால் பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு தகுதி சுற்றுசுவர் அமைக்கவும், பள்ளியில் செயல்படும் அங்கன் வாடிகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் ஆய்வு கூட்டங்களின் அறிவுரையின் பெயரில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அருகில் உள்ள குப்பைகள் மற்றும் பள்ளி வளாகத்தில் சேகரிக்கும் குப்பைகளை சேர்த்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள தொட்டி அமைக்கவும் ரூ.4.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 145<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| **9.** | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 சத்தியமூர்த்தி நகரவைப் பள்ளியில் செயல்படும் அங்கன்வாடியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தியதின்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி வளாகத்தில் மற்றும் அருகாமையில் உள்ள குப்பைகளை சேகரிக்கும் பொருட்டு தொட்டி அமைக்க ரூ.3.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை இந்நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 146<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| **10.** | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான குளோரின் வாயு சிலிண்டர்களில் நிரப்புவதற்கும் சிலிண்டர்கள் ஆய்வு செய்யவும் 17.10.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 02.11.2018ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குபட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s.அல்கெம் இன்டஸ்ட்ரீஸ், 32A ஊட்டி ரோடு, மேட்டுப்பாளையம். | ரூ.3,50,000/– | ரூ.3,45,138.50 |
| 2. | M/s.ஜெனரல்மார்க்கெட்டிங் எண்டர்பிரைசஸ், 25, பெரிய பள்ளிவாசல் தெரு, பழனி | ரூ.3,50,000/– | ரூ.3,50,800 |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு :<br>மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்(1) ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதைவிட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் மேட்டுப்பாளையம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிஉத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.2209/17/இ1)<br>**தீர்மானம் எண் :** 147<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |
| **11.** | இந்நகராட்சிச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திற்கு (சாமண்ணா வாட்டர் ஒர்க்ஸ்) நிலுவை மற்றும் நடப்பாண்டிற்கான (2018–19) சொத்துவரியினை செலுத்தக்கோரி தேக்கம்பட்டி தனி அலுவலர் அவர்களிடமிருந்து கேட்பு அறிக்கை வரப்பெற்றுள்ளது. மேற்படி சொத்துவரி ரூ.30000/–ஐ (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) தேக்கம்பட்டி ஊராட்சிக்கும் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>(ந.க.எண்.2009/11/அ5)<br>**தீர்மானம் எண் :** 148<br>**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது |

12\. மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்திப்பணிக்காக TNUDF மூலம் 9.15 கோடி அரசின் நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து நிதி பெற்று JICA ஜப்பான் பன்னாட்டு நிறுவனம் மூலம் குடிநீர் அபிவிருத்தி நடைபெற்று வந்தது. அதன்படி இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து வீட்டு உபயோகம் (Domestic) வீடு அல்லாத பிற இணைப்புகள் (Non Domestic) மற்றும் தொழிற்சாலை (Industries) ஆகிய குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகைகளை உயர்வு செய்ய நகர்மன்றத் தீர்மானம் எண்.308/ நாள்.05.02.2016 ல் அனுமதி பெறப்பட்டது. குடிநீர் உபவிதிகளில் திருத்தம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநராக தலைமைபொறியரின் பொது அங்கீகாரம் 22.06.2016ல் பெறப்பட்டது. இத்திட்டப்பணிகள் மார்ச் 2018க்குள் முழுமையாக முடிவுறும் என்று எண்ணி நகர்மன்ற தீர்மான எண். 215 நாள்.28.12.2017ல் குடிநீர் கட்டணங்களை 01.04.2018 முதல் உயர்த்திக் கொள்ள அனுமதி பெறப்பட்டது.

மேற்படிபணியினை தேசிய நெடுஞ்சாலைத்துறை அனுமதி கிடைக்க காலதாமதம் ஏற்பட்டதாலும், தேசிய நெடுஞ்சாலைப்பகுதியில் குழாய்கள் பதிக்கும் பொழுது அதிகப்படியான கேபிள்கள் பதிக்கப்பட்டிருந்ததாலும் மற்றும் பணிகள் முடிக்க கூடுதலான உபகரணங்கள் தேவைப்பட்டதாலும் நெடுஞ்சாலைத்துறை பகுதிகளில் குழாய்களை பதிக்க காலதாமதம் ஏற்பட்டது. எனவே பணிகள் முடிவுறாததால் பணிகள் முடிவுற்றவுடன் குடிநீர் விநியோக விதிகளின்படி குடிநீர்கட்டணம் மற்றும் வைப்புத்தொகையினை உயர்வு செய்யலாம் என இந்நகர்மன்றத் தீர்மான எண்.16 நாள்.30.04.2018ல் அனுமதி பெறப்பட்டது. தற்பொழுது பணிகள் அனைத்தும் முடிவுற்றதால் 01.04.2019 முதல் குடிநீர் மற்றும் வைப்புத்தொகைகளை உயர்வு செய்யவும் உயர்வு செய்யப்படவுள்ள குடிநீர் கட்டணங்களையும் கீழ்க்காணும்படி பத்திரிகையில் விளம்பரம் செய்தும் மேலும் அதன் வாயிலாக பொதுமக்களின் ஆட்சபேணை பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| குடிநீர் கட்டணம் வகைகள் | தற்போதைய குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. | திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டண மாதம் ஒன்றுக்கு ரூ. | தற்போதைய வைப்புத் தொகை இணைப்பு ஒன்றுக்கு ரூ. | திருத்தியமைக்கப்பட்ட வைப்புத்தொகை இணைப்பு ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|
| வீட்டு உபயோகம் (Domestic) | 100.00 | 150.00 | 4000.00 | 10,000.00 |
| வீடு அல்லாத பிற உபயோகம் (Non Domestic) | 250.00 | 300.00 | 11,000.00 | 20,000.00 |
| தொழிற்சாலைகள் (Industries) | 200.00 | 450.00 | 11,000.00 | 20,000.00 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.3014/2018/அ5)

**தீர்மானம் எண் :** 149

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

13\. இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் நகராட்சியில் செய்த பணிகளை தொழில் மலரில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்க்கண்டவாறு தொகை வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Bright advertising Chennai | Rs.25620.00 |
| 2 | Ravi Publicity Service Chennai | Rs.81480.00 |
| 3 | Express Publications (Madurai) Limited Coimbatore | Rs.25000.00 |
| 4 | KAL Publications (p) Ltd Coimbatore | Rs. 19047.00 |

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
( ந.க.எண்.3372/2018/இ1)

**தீர்மானம் எண் :** 150

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

14. மேட்டுப்பாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் (ந.க.எண்.1845/2018/இ1) 18.09.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்தமைக்கு கீழ்காணும் படி வரப்பெற்ற விளம்பரப்பட்டியல் தொகை ரூ.72188/–க்கு விளம்பரம் செய்த ரவி பப்ளிசிட்டி நிறுவனத்திற்கு தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| விளம்பரம் செய்த தேதி | விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழில்கள் | விளம்பர அளவு | விளம்பர தொகை |
|---|---|---|---|
| 31.08.2018 | நியூ இந்தியா எக்ஸ்பிரஸ் | 50 ச.செ.மீ | 48,750/– |
| 31.08.2018 | மாலை முரசு<br>SGST<br>CGST | 50 ச.செ.மீ<br>5%<br>5% | 20, 000/–<br>1718.75/–<br>1718.75/– |
| | | | 72188/– |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் :** 151

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

15. இந்நகராட்சி பொது சுகதாரப்பிரிவு வாகனம் டி.எண்.40பி – 1497க்கு தேவையான 2 எண்கள் டயர், டியூப் மற்றும் பிளாப் போன்றவை விநியோகம் செய்ய கடந்த 23.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர் ரிஷாப் எண்டர்பிரைசஸ், மேட்டுப்பாளையம் | ரூ. 19,000/– |
| 2. | திருவாளர். ரமேஷ் கம்பெனி, மேட்டுப்பாளையம் | ரூ.18,800/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ரமேஷ் கம்பெனி, மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1159/2018/எச்1

**தீர்மானம் எண் :** 152

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

16. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டி.எண்.40F–2273 தகுதி சான்றிதழ் பெற வேண்டி பழுது பார்க்கும் பணிக்கு கடந்த 23.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர் ஆர்.சி.சேகர் இன்ஜினியரிங் & ஹைறடுராலிக்ஸ், ஈரோடு | ரூ. 1,37,000/– |
| 2. | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஒர்க்ஸ், ஈரோடு. | ரூ.1,22,400/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.2044/2018/எச்1
**தீர்மானம் எண் :** 153
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

17. மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் சுமார் 21816 சொத்து வரி விதிப்புகள் உள்ளன. அதில் 11225 வீடுகளுக்கு மட்டும் குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேலும் நகரில் உள்ள பொதுமக்கள் வசதி இன்மையாலும், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாக உள்ளதாலும் குடிநீர் இணைப்புகள் வாங்க இயலவில்லை. ஆதலால் வரிவிதிப்பு உள்ளவர்களுக்கு புதிதாக நகராட்சி மூலம் குடிநீர் இணைப்பு வழங்க மதிப்பீடு சுமார் ரூ.220.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.682/2018/இ1
**தீர்மானம் எண் :** 154
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது